(1)

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109428

1. District மாவட்டம் : Erode PS: காவல்நிலையம் Erode VandAc Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/AC/2023 Date: நாள் 14.02.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: P.C Amendment Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 09.02.2023 Date to நாள் வரை : and 13.02.2023
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 15.30 hrs Time to நேரம் வரை : 12.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.02.2023 Time நேரம் : 17.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D.V01-I Time நேரம் : 13.02.2023 at 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் West Direction about 25 Km
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி office of the Revenue Inspector Perundurai Firka, Perundurai, Erode District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. RAVI
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chenniappan (late)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54 year
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Running Hotel
(g) Address : முகவரி D.NO.15/60, Chithambaranar Street Kanjikoil Road karumandicellipalayam. Perundurai Taluk, Erode District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Anbarasan, Revenue Inspector (RI), Perundurai Firka, Perundurai, Perundurai Taluk, Erode District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Recd. 14.02.2023 [signature] 14/02/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.02.2023
09.00 hrs

Name: பெயர் G. ARUMUGAM
Rank: நிலை Inspector of Police Vigilance Anti-Corruption Erode. No. எண் ..........

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 1/AC/2023 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் 13.02.2023 தேதி மாலை 17.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.C.ரவி வயது 54, த/பெ. சென்னியப்பன் (லேட்) க.எண்.15/60 சிதம்பரனார் வீதி, காஞ்சிக்கோயில் ரோடு, கருமாண்டிச்செல்லிபாளையம், பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணிணியல் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துபூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் C.ரவி, வயது 54, த/பெ. சென்னியப்பன் (லேட்) க.எண்.15/60 சிதம்பரனார் வீதி, காஞ்சிக்கோயில் ரோடு, கருமாண்டிச்செல்லிபாளையம், பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம் பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு ஐயா, நான் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டிச்செல்லிபாளையம், காஞ்சிக்கோயில்ரோடு, சிதம்பரனார் வீதி க.எண். 15/60-ல் என்குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பெருந்துறையில் கடந்த சுமார் 13 வருடங்கலாக ஒட்டல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது தாயார் திருமதி.வள்ளியம்மாள் அவர்களின் பூர்வீக தந்தை வழி சொத்து பெருந்துறை வட்டம், பணிக்கம்பாளையம் கிராம பழைய க.ச. எண்.106 (புதிய ரீ.சர்வே எண்.806/1 முதல் 8 வரை மற்றும் 807/ 1 முதல் 3 வரை), க.ச.எண்.255 (புதிய ரீ.சர்வே எண்.766/1), மற்றும் க.ச.எண்.256 (புதிய ரீ.சர்வே எண்.766/5) மொத்தமாக சுமார் 7 ஏக்கர் விவசாய பூமி எனது இறந்துபோன என்அப்பிச்சி ரங்கசாமிகவுண்டர் பெயரில் உள்ளது. மேற்படி பூமிக்கு என் அம்மாவின் தகப்பனார் லேட் திரு.ரங்கசாமி கவுண்டர் அவர்களின் தந்தை லேட். முத்துக்கவுண்டர் பின்னிட்டு அவரது வாரிகள் 1) பார்வதி (லேட்), 2) வள்ளியம்மாள், 3) சென்னியப்பன் மற்றும் 4) சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படி சொத்து சம்மந்தமாக என் அம்மா வள்ளியம்மாள் அவர்களுக்கு ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் 10ல் ஒரு பங்கு பாகம் எனவும், மற்ற வாரிசு தார்களுக்கு மீதமும் என உத்திரவு கிடைத்தது. அதன்படி பாகசாசனம் பெற்று பட்டா சிட்டாவில் பெயர் சேர்ப்பதற்கு வாரிசு சான்று அவசியமாக தேவைப்படுகிறது. எனவே, என் மாமா திரு.சென்னியப்பன் அவர்கள் 20.12.2022 ஆம் தேதி பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இ.சேவை மையத்தில் ஆன் லைன் மூலம் (விண்ணப்ப எண்.TN720221220663) விண்ணப்பித்தார். பின்னர் மேற்படி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவும், ஏன் என்று விசாரித்தபோது, இறந்தபோன ரங்கசாமி கவுண்டர் அவர்களின் இறந்துபோன மனைவி குப்பாயம்மாள் பெயர் வாரிசுதாரர் பட்டியலில் விடுபட்டு விட்டதால் வாரிசு சான்று கிடைக்கவில்லை என தெரியவந்தது. மீண்டும் என் அம்மாயி திருமதி.குப்பாயம்மாள் (லேட்) அவர்களின் பெயரை சேர்த்து கடந்த

23.01.2023 ஆம் தேதியன்று என் மாமா திரு.சென்னியப்பன் பெருந்துறை வட்டாட்ச்சியர் அலுவலகத்தில் உள்ள இ.சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் மீண்டும் விண்ணப்பித்தார் (விண்ணப்ப எண். TN 7202301231326) என்ற விபரம் எங்களது இணைப்பங்குதாரர் விஸ்வநாதன் அவர்கள் மூலமாக எனக்கு தெரிந்தது. ஆன் லைன் மூலமாக மேற்படி விண்ணப்பத்தின் ஸ்டேட்ஸ் பார்த்தபோது பெருந்துறை ஆர்.ஐ அவர்களிடம் பெண்டிங்காக இருந்தது. எனவே எனக்கு வீடுகட்டுவதற்கு பணம் பற்றாகுறையாக இருந்து வருவதாலும், அம்மாவிற்கு வயதாகி உடல் நிலை மோசமாக இருப்பதாலும், தற்போதே மேற்படி என்அம்மாவின் பங்கை பெற்று, அதைவிற்று பணத்தை வீடுகட்ட பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக வாரிசு தாரரான என் அம்மா வள்ளியம்மாள் சார்பாக பெருந்துறை ஆர்.ஐ அவர்களை பார்த்து சீக்கிரம் வாரிசு சான்று வாங்கலாம் என்று 09.02.2023 தேதியன்று மதியம் சுமார் 3.30 மணிக்கு பெருந்துறை ஆர்.ஐ ஆப்பீஸிக்கு நானும், திரு.விஸ்வநாதன் அவர்களும் சென்றோம். அப்போது ஆர்.ஐ அன்பரசன் அவர்கள் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் எங்களது ஒப்புகை ரசீதை காண்பித்து மேற்படி வாரிச் சான்று பற்றி விசாரித்தபோது, அவர் எங்களது ஆவணங்களை பார்வையிட்டு ரங்கசாமி கவுண்டர் கடந்த 1969ல் இறந்து இந்த வருடத்துடன் 54 வருடமாகிறது. நீங்கள் வாரிசு சான்று கோரி இப்போது விண்ணப்பிப்பதால் அதற்கு அதிக செலவாகும் என்றும், இதில் வட்டாட்ச்சியருக்கு வருடத்திற்கு பணம் ரூ.500/- வீதமும் 54 வருடத்திற்கு ரூ.27,000ம், ஆர்.ஐ ஆன எனக்கு வருடத்திற்கு பணம் ரூ.150/- வீதமும் 54 வருடத்திற்கு ரூ.8000/-ம் மொத்தமாக சேர்த்து பணம் ரூ.35,000/-ஐ நீங்கள் கொடுத்தால், நானே வாரிசு சான்றினை வட்டாட்சியரிடமிருந்து பெற்றுக்கொடுக்கிறேன் என்று கூறினார். அதற்கு நாங்கள் மற்ற வாரிசுதாரர்களையும் கேட்டுவிட்டு வருவதாக கூறி வந்துவிட்டோம். அதன்பின்பு இன்று 13.02.2023 மதியம் சுமார் 12.15 மணியளவில் மேற்படி ஆர்.ஐ அவர்களிடம் பணத்தை குறைத்து வாரிசு சான்று பெறவேண்டி கேட்கலாம் என்று வந்தோம். அதன்படி ஆர்.ஐ திரு.அன்பரசன் அவர்களிடம் மேற்படி தொகை அதிகம் என்றும், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டோம். அதற்கு அவர் குறைத்துக்கொடுத்தால் தாசில்தார் ஒத்துக்கொள்ளமாட்டார் என்றார். மீண்டும் நான் கெஞ்சி கேட்டதின் பேரில் பெருந்துறை ஆர்.ஐ அன்பரசன் அவர்கள் இறுதியாக ரூ.25,000/- கொடுத்தால் தான் வாரிசு சான்று பெற்றுத்தருவதாக கூறி நாளை வந்து பணத்தை கொடுங்கள் என்றும் அதன்பிறகு சிபாரிசு செய்து வாங்கிதருகிறேன் என்றும் கூறினார். நாங்களும் சரி என்று கூறி திரும்பிவந்து விட்டோம். பின்னர், நான் யோசித்து பார்த்தேன். எனது அம்மா வள்ளியம்மாள் மற்றும் உடன் பிறந்தவர்களின் பெயரில் வாரிசு சான்று பெறுவதற்கு ஆர்.ஐ திரு.அன்பரசன் அவர்களுக்கு லஞ்சமாக கேட்கும் 25 ஆயிரத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, வாரிசு சான்று பெறுவதற்கு லஞ்சமாக பணம் ரூ.25 ஆயிரம் கேட்கும் பெருந்துறை ஆர்.ஐ திரு.அன்பரசன் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். மேற்படி ஆர்.ஐ லஞ்சமாக கேட்ட பணம் ரூ.25 ஆயிரத்தை கொண்டு வந்துள்ளேன் என்பதையும் இதன்மூலம்

தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம XXXX (C.ரவி) 13/02/2023 ஈரோடு 13.02.2023.

Sir, Received the above said computer tamil typed complaint on 13.02.2023 at 17.00 hrs. Sd/- (xxxxxxxx) 13.02.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.Anbarasan today on 14.02.2023 at 08.00 hrs Sd/- (xxxxxxxx) 14.02.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.C.Ravi, age 54, s/o late Chenniappan, D.No. 15/60 Chithambaranar street, Kanjikovil road, Karumandichellipalayam, Perundurai taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

14/02/2023

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.